tamilguru.lk

## சுகாதார அமைச்சு

## துணை மருத்துவ சேவையின் கற்கை நெறிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2024

### இணையவழி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

1. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய முன் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இந்த அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.

2. விண்ணப்பங்களை சுகாதார அமைச்சின் www.health@gov.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.

3. 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய ஆண்டுகளில் ஏதாவதொரு ஆண்டில் கல்வி பொது தராதர (உ.தர) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி சித்தியடைந்தவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுவார்கள். (மேலதிக விபரங்கள் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை இலக்கம் 02 இல் காட்டப்பட்டுள்ளது.)

4. விண்ணப்ப முடிவுத் திகதி 2024.04.25 ஆகும்.

5. ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். **(வர்த்தமானி அறிவித்தலின் 1.1 பந்தியை பார்க்கவும்).**

6. ரூபா 1000 /= இனை இணைய வங்கிச் சேவை மூலமாகவோ அல்லது பணம் வைப்பு இயந்திரங்கள் மூலமாகவோ **செலுத்தக்கூடாது.**

7. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன் இலங்கை வங்கிக்குச் சென்று ரூபா 1000/= இனை செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தி வங்கியினால் பெறப்பட்ட **பற்றுச்சீட்டில் உள்ள அச்சு இலக்கங்களை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் உள்ளீடு செய்த பின்னரே விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.** அவ்வாறு செய்யாமல் அதாவது, விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் பணம் செலுத்திய அல்லது பணம் செலுத்தாமல் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். **(வர்த்தமானி அறிவித்தலின் 1.4 மற்றும் 8.4 பந்திகளை பார்க்கவும்)**

8. விண்ணப்பத்தை முறையாக சமப்பிக்கப்பட்டவுடன் கிடைக்கும் அதனை பிரதியை ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கட்டாயமாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் (Print – out) 05 இலக்கங்கள் கொண்ட குறியீட்டையும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பத்தின் நகல் மற்றும் 05 இலக்கங்களைக் கொண்ட குறியீடு கிடைக்காத விண்ணப்பதார்கள் உடனடியாக மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவை தொடர்பு கொள்ளவும். **(வர்த்தமானி அறிவித்தலின் 8.5 வது பந்தியின் (அ) முதல் (இ) வரையான துணை பந்திகளையும் 8.6 (அ) பந்தியையும் பார்க்கவும்)**

9. பின்வரும் தகைமைகளைக் கொண்டிராத மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்கக்கூடாது. (வர்த்தமானி அறிவித்தலின் 6 வது பந்தியின் 6.1 முதல் 6.4 வரையான துணை பந்திகளை பார்க்கவும்)

   (அ). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில்/ அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகளின் கீழ், உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

   (ஆ). தேசிய கல்வியல் பீடம், சுகாதார அமைச்சு உட்பட பிற அரச நிறுவனங்களில் உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் முழு நேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கல்வி பயிலும் மாணவர்கள்.

10. எந்தவொரு விண்ணப்பதாரியும் தனது இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. (வர்த்தமானி அறிவித்தலின் 1.3 வது பந்தியை பார்க்கவும்)

11. கையடக்க தொலைபேசி இலக்கத்தை உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் தனது மற்றும் தந்தை /தாய் / பாதுகாவலரின் கையடக்க தொலைபேசி இலக்கத்தையும் உள்ளிடலாம்.

12. விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறைகளை ஆரம்பிக்க முன்னர் விண்ணப்பதாரியிடம் இருக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் விபரங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 1.4 வது பந்தியை பார்க்கவும்)

- தேசிய அடையாள அட்டை
- உங்களின் உயரம் (செ.மீட்டரில்) குறிப்பிடப்படல் வேண்டும்
- க.பொ.த (சா.தரம்)/ (உ.தரம்) சான்றிதழ்கள் மற்றும் Z மதிப்பெண்களைக் காட்டும் ஆவணம்
- தொடர்பு கொள்ள வேண்டிய இரண்டு கையடக்க தொலைபேசி இலக்கங்கள்
- ரூபா 1000/= இனை செலுத்திய பின்னர் வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு (வர்த்தமானி அறிவித்தலின் 8.4 வது பந்தியை பார்க்கவும்)

13. **இணைய வழி ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்**

(அ). விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஆ). க.பொ.த (உ.தர) பரீட்சையில் பயன்படுத்திய தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்த வேண்டும்.

(இ). உரிய பரீட்சை இலக்கத்தை உள்ளிட்டதும் க.பொ.த (உயர் தர) பரீட்சை பெறுபேறுகள் மற்றும் க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேறுகள் தானாகவே உருவாகும். எனினும் அந்த பெறுபேறுகளில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின், உங்களிடம் உள்ள பெறுபேற்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளை அதற்கு கீழே உள்ள பிரிவில் குறிப்பிடவும்.

14. **அத்தியவசிய தகவல்களுக்காக விசாரித்தல்**

இக்கற்கைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளுக்கு அல்லது மேலே வர்த்தமானி அறிவித்தலின் 8.5 (இ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மட்டும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரை சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் 0112 340 007 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். hrcodmoh@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். **(மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளும்போது எப்போதும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயமாகும்.)**

பிற விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.

15. நேர்முகப்பரீட்சை நடத்திய பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பற்றிய தகவல்கள் இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்பதுடன், எவ்வாறாயினும், அவ்வப்போது எழும் குறிப்பிட்ட தகவல்களைப் பற்றி தெரிவிக்க நேரிட்டால், நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் /அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அறிவிக்கப்படும்.எனவே, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாமல், செயலில் வைத்திருப்பது உங்களின் பொறுப்பாகும். மேலும் மாற்றங்கள் அல்லது செயலற்று இருப்பதால் உரிய தகவல்கள் சரியான நேரத்தில் தெரிவிக்க முடியாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு இந்த அமைச்சு பொறுப்பல்ல.